செய்தி வெளியீடு எண் : 819 நாள் : 03.05.2023

# ஊடகவியலாளர்கள் தங்களின் துறை சார்ந்த தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்கும், திறன்மேம்பாட்டை அதிகரிக்கவும், மொழித்திறன் மற்றும் நவீனத் தொழில்நுட்ப பயிற்சி – மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

சென்னை, கலைவாணர் அரங்கில் இன்று (03.05.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நடைபெற்ற "ஊடகவியலாளர்கள் தங்களின் துறை சார்ந்த தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்கும், திறன்மேம்பாட்டை அதிகரிக்கவும், மொழித்திறன் மற்றும் நவீனத் தொழில்நுட்ப" பயிற்சியினை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

**மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய தலைமையுரை:**

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ஊடகவியலாளர்களுக்கு தங்களின் துறை சார்ந்த தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்கும், திறன் மேம்பாட்டை அதிகரிக்கவும், மொழித் திறன் மற்றும் நவீன தொழில்நுட்பப் பயிற்சி நடைபெறுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற காலகட்டம் என்பது கொரோனா தொற்று என்ற சூழ்நிலையில் மக்கள் எந்தளவுக்கு அவதிக்குள்ளானார்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள். அந்த காலத்திலிருந்து படிப்படியாக தேர்தல் நேரத்திலும் அதிகரித்த போது இந்த அரசுப் பொறுப்பேற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு மாலையே எங்களையெல்லாம் அழைத்து உடனடியாக அந்தந்த மாவட்டத்திற்குச் சென்று மாவட்ட நிர்வாகம், மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகளோடும், மருத்துவர்களோடும் கலந்துபேசி முதலில் நாம் இந்த கொரோனா தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். நாங்களும் மாவட்டங்களுக்கு சென்று அந்தப் பணியை மேற்கொண்டோம். அந்த காலகட்டத்தில் பத்திரிகையாளர்களும், மருத்துவர்களும், நாமும் தான் அதிகமாக மக்களிடம் நெருக்கமாக செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இதில் பாதிப்புக்குள்ளானவர்கள் இரு தரப்பிலும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மக்களிடத்தில் கொரோனா குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, தடுப்பூசி போடுகிற நிகழ்வாக இருந்தாலும் சரி, அவரே பல்வேறு மாவட்டத்திற்கு நேரில் சென்று அந்த நிகழ்வை தொடங்கி வைத்து,

மருத்துவமனையில் கொரோனா தொற்றின் காரணமாக சிகிச்சையில் இருந்தவர்களையெல்லாம் நேரிலே சந்தித்து ஆறுதல் தெரிவித்து, மருத்துவத் துறையோடு தொடர்ந்து கலந்துரையாடல் செய்து, தடுப்பூசியை அதிகப்படுத்தி தமிழ்நாட்டில் படிப்படியாக கொரோனா தொற்று பாதிப்பு என்பதை குறைக்கச் செய்தார்கள். அந்த நேரத்தில் இரவு, பகல் பாராமல் அனைவரும் பணியாற்றினார்கள். அவ்வளவு ஒரு இக்கட்டான, ஒரு நெருக்கடியான காலக்கட்டம். எனவே, அதிலிருந்து நாம் மீண்டுவருவதற்கு ஏறத்தாழ ஒரு எட்டு மாத காலம் இந்த அரசுக்கு தேவைப்பட்டது.

தமிழநாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிதிநிலைமை என்பது மிக மோசமான சூழ்நிலையில் இருந்தாலும், அதிலிருந்து படிப்படியாக மீண்டுவருகிறது. கொரோனா தொற்றின்போது களப் பணியில் இருந்த பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்து, அவர்களுக்கு உதவித் தொகை, கொரோனா பாதிக்கப்பட்டு மரணமடைந்த பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம் நிவாரண உதவி உயர்த்தி வழங்கப்படுகிறது.

இன்றைக்கு ஜனநாயகத்தில் நான்கு தூண்களில் ஒரு தூணாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசினுடைய திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லக்கூடியவர்கள் நீங்கள். உண்மையான செய்திகளை எடுத்துச் செல்வதற்கு நீங்களெல்லாம் உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு விரைவுச் செய்தி, அதிரடியான செய்தியை மக்கள் மத்தியில் எட்டுகிற சூழ்நிலையாக இருக்கிறது. அது ஒருபுறம் இருந்தாலும் தேவையான செய்தியை உடனுக்குடன் வெளிப்படுத்தியாக வேண்டும். அதே நேரத்தில், பத்திரிகையை கையில் எடுத்தால் அதில் எழுதியிருப்பது சரியாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒவ்வொரு பத்திரிகையாளரும் பணியாற்ற வேண்டும்.

இன்றைக்கு அச்சு ஊடகத்திற்கு தான் ஒன்றிய அரசின் சார்பில் இருக்கக்கூடிய சட்டமாக இருக்கிறது. தற்போது, காட்சி ஊடகம் வந்துவிட்டது, அதற்குப் பிறகு யு டியூப் சேனல், சமூக ஊடகங்கள் இப்படி பல்வேறு வளர்ச்சியை நாம் பெற்றிருக்கின்ற நேரத்தில், இன்னும் சட்டரீதியாக அதையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டிய சூழ்நிலை ஒன்றிய அரசுக்கு இருக்கிறது, மாநில அரசுக்கும் அதிலே பங்கு இருக்கிறது. சட்டம் இருந்துதான் நம்மைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இல்லாமல், மனசாட்சியின் அடிப்படையில் நீங்களெல்லாம் செயல்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த இரண்டாண்டு காலத்தில் செய்திருக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லுங்கள். தவறு இருந்தாலும் சுட்டிக் காட்டுங்கள், அதை திருத்திக் கொள்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். இந்த கருத்தரங்கம் மூலமாக நீங்கள்

நிச்சயமாக பண்படுவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் ஏற்கனவே பண்பட்டவர்கள், அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை, அதே நேரத்தில் உங்களுக்கு அனுபவ ரீதியாக இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, இந்த நல்ல நிகழ்வில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைந்து, இந்த நிகழ்ச்சி வெற்றிபெற, நோக்கம் வெற்றிபெற என்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்து வாய்ப்பிற்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்."

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப. அவர்கள் நன்றி தெரிவித்தார்.

இப்பயிற்சியில், "நாளிதழ்கள் செய்திகளை வெளியிடுவதில் சந்திக்கும் சட்டச் சிக்கல்கள்" என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு.கே.சந்துரு, "அரசியல் பார்வையில் செய்தியாளர்கள்" என்ற தலைப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன், "உண்மைச் செய்திகளை சேகரித்தல், தொகுத்தல், வரைமுறை செய்தல் மற்றும் வெளியிடுதல்" என்ற தலைப்பில் மூத்த பத்திரிகையாளர் திரு.கோலப்பன், "தமிழ் மற்றும் ஆங்கில உச்சரிப்புகளை இலக்கணப் பிழையின்றி பேசுவது மற்றும் செய்திகளை தொகுத்து வெளியிடுதல்" என்ற தலைப்பில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணை இயக்குநர் திரு.ரெ.கோமகன், ஆகியோர் உரையாற்றினார்கள்.

மேலும், ஊடகவியாளர்களுக்கு நடைபெற்ற பயிற்சியில், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருநெல்வேலி , விழுப்புரம், கடலூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in